நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த
தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2021

இடைநிலை கீழ்ப் பிரிவு (ஆண்டு 5, 6)
Level : Intermediate Lower (Year 5 & 6)

வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள்
Time Given : 75 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த
# தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை - 2021
# இடைநிலை கீழ்ப் பிரிவு (ஆண்டு 5, 6)

**பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.** (புள்ளிகள் 2×37 = 74 )

01. "ஆறுவது சினம்"
"ஊக்கமது கைவிடேல்"
மேற்கூறியவை யாரால் கூறப்பட்டது.

(அ) பாரதியார் (ஆ) ஔவையார்
(இ) திருவள்ளுவர் (ஈ) கம்பர்

02. "சினம்" என்ற சொல்லுக்கு பொருள்.

(அ) பதற்றம் (ஆ) மகிழ்ச்சி
(இ) கோபம் (ஈ) ஓய்வு

03. "சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே"
வையகம் என்பதன் பொருள்.

(அ) தமிழ்நாடு (ஆ) பூமி
(இ) விண்ணுலகம் (ஈ) பாடசாலை

04. தமிழை வளர்க்கத் தமிழ் மன்னர்கள் அமைத்த சங்கம் எது?

(அ) முதியோர் சங்கம் (ஆ) எழுத்தாளர் சங்கம்
(இ) தமிழ்ச் சங்கம் (ஈ) நடிகர் சங்கம்

05. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலை இயற்றியவர் யார்?

(அ) திருவள்ளுவர (ஆ) இளங்கோவடிகள்
(இ) பாரதியார் (ஈ) கணியன் பூங்குன்றனார்

06. தமிழரின் தனித்துவத்தைக் காட்டும் கலைகள் எனப்படுபவை

(அ) ஓவியக்கலை (ஆ) சிற்பக்கலை
(இ) கட்டடக்கலை (ஈ) மேற்குறிப்பிட்ட எல்லாம்

07. கன்னியாகுமரியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலை எத்தனை அடி உயரமானது?

(அ) ஆயிரத்து முந்நூற்றி முப்பது (ஆ) முந்நூற்றி முப்பது
(இ) நூற்று முப்பத்தி மூன்று (ஈ) ஆயிரத்து முப்பது

08. கீழேயுள்ள பெரியார்களின் பெயர்களை இடமிருந்து வலமாக ( ➡ ) சரியான ஒழுங்கில் குறிப்பிடுக:-



(அ) பாரதியார், சுவாமி விவேகானந்தர், ஆறுமுக நாவலர், திருவள்ளுவர்
(ஆ) சுவாமி விவேகானந்தர், பாரதியார், திருவள்ளுவர், ஆறுமுக நாவலர்
(இ) திருவள்ளுவர், பாரதியார், சுவாமி விவேகானந்தர், ஆறுமுக நாவலர்
(ஈ) ஆறுமுக நாவலர், பாரதியார், சுவாமி விவேகானந்தர், திருவள்ளுவர்

09. சிலப்பதிகாரக் கதையுடன் தொடர்புடையுடைய இடம் எது?

(அ) சிட்னி (ஆ) மதுரை

(இ) மன்னார் (ஈ) திருச்சி

10. ஒரு மனிதனுக்கு வாழ்வின் இறப்புவரை கூடவே வருவது எது?

(அ) செல்வம் (ஆ) கல்வி

(இ) புகழ்ச்சி (ஈ) மதிப்பு

11. மனித வாழ்விற்கு தேவையானவை.

(அ) உறைவிடம் (ஆ) உடை

(இ) உணவு (ஈ) எல்லாம் சரி

12. புலம்பெயர் நாடுகளில் தமிழர்களின் கலாசார இழப்புக்களில் மிக முக்கியமானதொன்று, நமது பெற்றோரை நாம் அழைக்கும் முறை.

(அ) ஆச்சி, அப்பு (ஆ) அம்மா, அப்பா

(இ) மம்மி, டடி (ஈ) ஆச்சி, ஐயா

13. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனப் பாடியவர்.

(அ) பாரதியார் (ஆ) திருவள்ளுவர்

(இ) ஔவையார் (ஈ) கம்பர்

14."ஜல்லிக்கட்டு" வீர விளையாட்டில் எந்த மிருகத்தைப் பயன்படுத்துவார்கள்?

(அ) குதிரை (ஆ) எருமை

(இ) காளை மாடு (ஈ) ஆடு

15. அம்மாவின் சகோதரனை மாமா என்று அழைத்தால், அப்பாவின் சகோதரியை எவ்வாறு அழைக்கலாம்?

(அ) சித்தி (ஆ) மச்சாள்

(இ) பெரியம்மா (ஈ) அத்தை அல்லது மாமி

16. அவுஸ்திரேலியாவின் தலைநகரம் எங்கே அமைந்துள்ளது?

(அ) மெல்பேர்ண் (ஆ) டார்வின்

(இ) கான்பரா (ஈ) தஸ்மேனியா

## கோடிட்ட இடங்களுக்குரிய எழுத்துப் பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்க.

17. நாங்கள் சென்றவாரம் தமிழில் கவிதை.........................................

(அ) எழுதிணோம் (ஆ) எளுதினோம்

(இ) எலுதிணோம் (ஈ) எழுதினோம்

18. பழமையும், பெருமையும் வாய்ந்த தமிழ்ச் ......................................... விஞ்ஞான வளர்ச்சிக்குக் கணிசமான அளவு பங்களித்துள்ளது.

(அ) சமூதாயம் (ஆ) சமுதாயம்

(இ) சமுதயம் (ஈ) சமூதயம்

19. "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் .........................................எனக் கேட்ட தாய்.

(அ) சன்றோன் (ஆ) சான்றன்

(இ) சன்றேன் (ஈ) சான்றோன்

## கீழ் வரும் வினாக்களுக்கு பொருத்தமான சொல்லை தேர்ந்தெடுக்க:-

**(அ) அறிந்து (ஆ) அலகு (இ) அழகு (ஈ) அரிந்து**

20. மயில் ............................. மிக்க பறவைகளில் ஒன்று. (அ) (ஆ) (இ) (ஈ)

21. கிளியின் ............................. வளைந்து இருக்கும். (அ) (ஆ) (இ) (ஈ)

22. மாம்பழத்தை சிறு சிறு துண்டுகளாக ............................. உண்பர். (அ) (ஆ) (இ) (ஈ)

23. நான் சொன்னவற்றை நீ ............................. கொண்டாயா? (அ) (ஆ) (இ) (ஈ)

## ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க?

24. "ஐயம் திரிபறக் கற்றல்" எனும் தொடரில் **"ஐயம்"** என்ற சொற்பதம் விளக்குவது?

(அ) அச்சம் (ஆ) ஐந்து

(இ) சந்தேகம் (ஈ) பொய்மை

## எதிர்க் கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க ?

25. மாணவர்கள் இடைவேளை நேரத்தில் **சண்டை** பிடித்தனர்.

(அ) அமைதி (ஆ) போர் நிறுத்தம்

(இ) சமாதானம் (ஈ) ஆரவாரம்

26. "முயற்சி உடையார் **இகழ்ச்சி** அடையார்" என்பது சான்றோர் வாக்காகும்.

(அ) மகிழ்ச்சி (ஆ) சூழ்ச்சி

(இ) வீழ்ச்சி (ஈ) புகழ்ச்சி

## பிரித்து எழுதுக

27. கலாசாரம்

(அ) கல் + ஆசாரம் (ஆ) கலை + சாரம்

(இ) கல் + சாரம் (ஈ) கலை + ஆசாரம்

## சேர்த்து எழுதுக

28. கடல் + கரை

(அ) கடல்கரை (ஆ) கடற்கரை

(இ) கடக்கரை (ஈ) கடட்கரை

29. கலை + திறன்

(அ) கலைத்திறன் (ஆ) கலைற்றிறன்

(இ) கலைதிறன் (ஈ) கலாத்திறன்

## கீழேயுள்ள பழமொழிகளுக்கு உரிய கருத்துக்களை கீழ்வரும் (அ), (ஆ), (இ), (ஈ) இலிருந்து தெரிவு செய்க:-

30. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். (அ) (ஆ) (இ) (ஈ)

31. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை. (அ) (ஆ) (இ) (ஈ)

**(அ) திருப்தி அடையாதவர்**

**(ஆ) ஊக்கம் உடையவர் உயர்வு பெறுவர்**

**(இ) படிக்க வேண்டியவை அளவற்றன**

**(ஈ) சுகம் மிக்க வாழ்வே செல்வ வாழ்வு**

## பின்வரும் விலங்குகளின் இளமைப் பருவப் பெயர்களை தெரிவு செய்க.

32. சிங்கம்

அ) குருளை ஆ) பிள்ளை இ) குஞ்சு ஈ) கன்று

33. பசு

அ) குருளை ஆ) பிள்ளை இ) குஞ்சு ஈ) கன்று

**கீழ்வரும் வசனத்தில் காலத்தை தெரிவு செய்க.**

34. ஈழத்தின் தமிழ்ப் பிரதேசத்தை 2000 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் அரசர்கள் ஆண்டார்கள் :-

(அ) எதிர்காலம் (ஆ) நிகழ்காலம் (இ) இறந்தகாலம் (ஈ) பலகாலம்

**கலைவிழாவில் மாணவர்கள் நாடகம் நடித்தார்கள்.**
இவ் வாக்கியத்தில்:-

35. எழுவாய்....................

(அ) மாணவர்கள் (ஆ) கலைவிழாவில் (இ) நாடகம் (ஈ) நடித்தார்கள்

36. பயனிலை....................

(அ) மாணவர்கள் (ஆ) கலைவிழாவில் (இ) நாடகம் (ஈ) நடித்தார்கள்

37. செயற்படுபொருள்....................

(அ) மாணவர்கள் (ஆ) கலைவிழாவில் (இ) நாடகம் (ஈ) நடித்தார்கள்

**பின்வரும் கதையை வாசித்து வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்க.**

(புள்ளிகள் 2×5 = 10 )



பாடசாலை விடுமுறையில் ஒரு நாள் கபிலனின் வீட்டிற்கு அவனுடைய நண்பர்களான பரதனும் அகிலனும் விளையாட வந்தனர். அவர்கள் கபிலனின் வீட்டுத்தோட்டத்தில் பிறந்து ஒரு வாரமேயான ஆறு பூனைக்குட்டிகளைக் கண்டனர்.

அப்பூனைக்குட்டிகளைத் தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்ல விரும்பினர். இருவரும் ஆளுக்கு இரண்டு பூனைக்குட்டிகளைத் தூக்கிக் கொண்டனர். ஆனால், கபிலன் அவர்களிடம் "நண்பர்களே! இந்தக் குட்டிகளைத் தாயிடமிருந்து பிரிக்க வேண்டாம். எம்மை யாராவது நம் பெற்றோரிடமிருந்து பிரித்தால் எப்படி இருக்கும் மென்று எண்ணிப்பாருங்கள்" என்று கூறினான். நண்பர்கள் உடனேயே அந்தப் பூனைக்குட்டிகளை கீழே இறக்கி விட்டனர். அவை யாவும் ஓடிச்சென்று தம் தாயுடன் மகிழ்ச்சியோடு விளையாடின. அதனை கபிலனும் அவனது நண்பர்களும் பார்த்து மகிழ்ந்தனர்.

38. கபிலனின் வீட்டுத்தோட்டத்தில் எத்தனை பூனைக்குட்டிகள் நின்றன?

(அ) இரண்டு (ஆ) ஆறு (இ) மூன்று (ஈ) நான்கு

39. நண்பர்கள் இருவரும் எதற்காக கபிலனின் வீட்டுக்கு வந்தனர்?

(அ) விடுமுறையில் படிப்பதற்காக (ஆ) விடுமுறையில் படம் பார்பதற்காக

(இ) விடுமுறையில் விளையாடுவதற்காக (ஈ) விடுமுறையில் சுற்றுலா போவதற்காக

40. அந்த பூனைக்குட்டிகள் பிறந்து எத்தனை நாட்கள் ஆகியிருந்தன?

(அ) ஐந்து (ஆ) ஆறு (இ) மூன்று (ஈ) ஏழு

41. நண்பர்கள் அந்தப் பூனைக்குட்டிகளை என்ன செய்ய விரும்பினர்?

(அ) தடவி அணைக்க (ஆ) சாப்பிட வைக்க

(இ) தூக்கி விளையாட (ஈ) தங்கள் வீட்டிற்குக் கொண்டு செல்ல

42. நண்பர்களுக்கு கபிலனின் அறிவுரை என்ன?

(அ) தாயிடமிருந்து குட்டிகளைப் பிரிப்பது நல்லது.

(ஆ) தாயிடமிருந்து குட்டிகளைப் பிரிப்பது நன்றன்று.

(இ) சில நாட்களுக்குப் பின் குட்டிகளை தாயிடமிருந்து பிரிப்பது நல்லது.

(ஈ) குட்டிகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பிரித்து வைப்பது நல்லது.

**பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்க.**

(புள்ளிகள் 2×3 = 06 )



சின்னஞ் சிறு குருவி போலே-நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப் பறவைகளைக் கண்டு- நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா .

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு -என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா

--மகாகவி பாரதியார்

43. படிப்பதற்கு உகந்த நேரம் எது என்று கவிஞர் இந்த பாடலில் கூறுகிறார்?

(அ) காலை (ஆ) மாலை

(இ) இரவு (ஈ) மதியம்

44. இந்த பாடலில் “வண்ணம்” என்ற சொல்லின் பொருள் என்ன?

(அ) நிறம் (ஆ) பறவை

(இ) கருமை (ஈ) குருவி

45. இப்பாடலை பாடிய கவிஞர் யார்?

(அ) பாரதியார் (ஆ) திருவள்ளுவர்

(இ) பாரதிதாசன் (ஈ) சுவாமி விவேகானந்தர்

46. பின்வருவனவற்றில் <u>ஒன்றைப்</u> பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

(புள்ளிகள் 2×5 = 10 )

அ. நான் விரும்பும் நாடு

ஆ. எனது குடும்பம்

இ. பாடசாலை நூலகம்

ஈ. காட்டுத் தீ

திரைகடலோடியும் திரவியம் தேடு, தீந்தமிழ் பேணுதும்

NEW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

**நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**

**NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.**

**கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை**

**DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION**

**2021**

Email:info@nswfts.org.au | www.nswfts.org.au